www.tamilarangam.net

## தொடர்ந்துவரும் அடக்குமுறையின் கோரங்களையும் கொடுமைகளையும் நம் தமிழீழ மழலைகள் தொடர்ந்தும் அனுபவிக்காமலிருக்க

## நீ எம் மக்களுக்கு செய்த அழிவுவேலைகளும்நாசவேலைகளும் எம் மனதில் அழியாது உறைந்துபோய்க் கிடக்கின்றன



## நிரந்தர விடிவிற்காய்



"தமிழீழம்" என்ற எமது தாய்நாட்டின் சுதந்திரம் விலை மதிப்பற்றது; விட்டுக் கொடுக்க முடியாத அடிப்படை உரிமை; அதற்கு மாற்றுத் திட்டங்களோ வேறு அரசியல் தீர்வுகளோ கிடையாது; சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தை எமது மண்ணிலிருந்து துரத்தியடித்து சுதந்திரத் தமிழீழம் அடையும் வரை தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் ஓயாது. அதுவரை ஏந்திய ஆயுதங்களைக் கீழே போடவோ, விடுதலைப் போரை ஒத்திவைக்கவோ நாம் தயாரில்லை; வேண்டுமானால் எதிரிகளுடன் போராடிக் களத்தில் மடிவோமே தவிர மாற்றார்களிடம் மண்டியிடும் வழக்கமே தமிழீழ விடுதலைப்புலிகளின் அகராதியில் கிடையாது."

# நாம் போராடுகிறோம்

தமிழ் பேசும் மக்களின் கடந்த கால வரலாற்றில் காலம்காலமாக அனுபவித்து வந்த துன்பங்களும்துயரங்களும்கணக்கிலடங்காதவை பதவிக்குவந்த அத்தனை சிறிலங்கா அரசும் இனவாதத்தைக் கட்டி வளர்த்து அதனூடாகவே தமது பதவியைக் கட்டிக் காத்து வந்துள்ளன. இனவெறி பிடித்த சிறிலங்கா அரசு எம்மக்களுக்குச் செய்து வரும் கோரங்களும் கொடுமைகளும் முற்றாக முற்றுப்பெற நிரந்தர விடிவிற்காகவே நாம் போராடுகின்றோம்.



தொடரும் அடக்குமுறைகள்!

காலம் காலமாக............

பேச்சுவார்த்தைகள்!

உடன்படிக்கைகள்!

எழுதிய மை காய முன்பே கிழித்தெறியப்பட்ட

—உடன்படிக்கைகள்!

தொடர்ந்து தொடரும் அடக்கு முறைகள்!

இவற்றிற்கெல்லாம்நிரந்தரவிடிவு-இறுதி லட்சியமடைய நாம் எம்மை தியாகவேள்வியில் அர்ப்பணித்துப் போராடி வருகின்றோம்.

## "புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"

www.tamilarangam.net

# A NATION IS BLEEDING!

# IT NEEDS ALL HELP TODAY!

# NOT TOMORROW!

தமிழ் ஈழம் அமைக்க, எந்தவகைச் சோதனைகளையும், வேதனைகளையும் தாங்கிக்கொள்ளும் ஏற்றமிகு, எழில்மிக்க ஈழம்வாழ் புரட்சித் தமிழர்களையும், உலகநாடுகளிலுள்ள பொதுவுடைமைத் தமிழர்களையும், விடுதலைப் புலியியக்கத்தில் சேருமாறும் உதவிகள் புரியுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

"வாதாடி விழ்வதைவிட்டுப் போராடி வாழ்வோம்".



"எந்த வெளிச் சக்தியையும் நம்பி எமது போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை.
எமது இலட்சியத்தை அடையும் வரை போராடிக் கொண்டே இருப்போம்."

## தமிழீழ யுத்த நிதி

தமிழ்ப் பெருமக்களே! இன்று தமிழீழ மெங்கும் தலைவிரித் தாடுகின்ற சிங்களப் பேரின வாத அரசின் "தமிழின ஒழிப்பு" நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளது. இதன் நிமித்தம் எமது இளைஞர்கள் காரணமின்றி சுட்டுத் தள்ளப்படுகிறார்கள். எமது சகோதரிகள் கற்பழிக்கப்பட்டு சித்ரவதையுடன் தூக்கிலிடப்படுகிறார்கள்.

எமது சிறுவர்களின் தலைகள் சிதறடிக்கப்படுகின்றன. எம்பெற்றோரின் பிணங்கள் வீதியோரங்களில் நாய்களுக்கும் கழுகுகளுக்கும் இரையாகின்ற காட்சி இவ்விதமாக எமது தமிழ் அப்பாவிப் பொதுமக்கள் [illegible] சிங்களக்காடையர்களாலும் கூலிப் பட்டாளத்தாலும் அழிக்கப்பட்டு வருகிறார்கள். இக்கட்டான இக்காலகட்டத்தில் இந்த பாசிச இன வெறியர்களிடமிருந்து எமது மக்களை பாதுகாக்கவும், எமது தாய் மண்ணை மீட்டெடுக்கவும் வீர விடுதலைப் போராட்டத்தில் குதித்திருக்கிறது எமது விடுதலை இயக்கம். எமது புரட்சிகர ஆயுதப் போராட்டம் மென்மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. எமது ஆயுதம்தரித்த கொரில்லா அணிகள் மேலும் மேலும் களத்தில் குதித்துக்கொண்டே இருக்கிறார்கள். எனவே எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு உங்களைப் போன்ற தமிழ் இன உணர்வு கொண்ட தமிழர்களின் முழு ஆதரவையும் எதிர்பார்க்கிறோம்.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்
அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளீர்.

## தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்

VOICE OF LIBERATION TIGERS

தமிழீழத்தில் நடைபெறும் சம்பவங்கள் பற்றிய உர்ஜிதப்படுத்தப்பட்ட செய்திகளுக்கு "தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்" செய்திச் சேவையுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல. 01-475 0543




## "புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"